Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 3 ஆம் நாள் துல்ஹஜ் 2 (15-4-64 புதன்கிழமை இதழ் 64

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# இரு மந்திரிகள் பதவி இழக்கலாம்

## கூட்டு ஆட்சி பற்றி ஆளும் கட்சி நாளை ஆராயும்

கொழும்பு, செவ்.

**ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் செயற்குழு வியாழக்கிழமை கூடி இடதுசாரித் தலைவர்களுடன் கூட்டு அரசாங்கம் அமைப்பது பற்றி ஆலோசனை செய்யவிருப்பதாகத் தெரிகிறது. இடதுசாரித் தலைவர்களையும் சேர்த்து கூட்டு அரசாங்கம் அமைக்கும் யோசனையை செயற்குழு ஏற்றுக்கொள்ளுமெனக் கூறப்படுகிறது.**

கூட்டு அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் இப்போதைய மந்திரிசபை ராஜினமாச் செய்து புதிய மந்திரிசபை பதவியேற்கும். புதிய மந்திரிசபையில் தற்போதைய மந்திரிகளிருவர் இடம்பெறமாட்டார்களென்றும் அறியப்படுகிறது.

இடதுசாரி சுதந்திரக்கட்சி கூட்டு அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியையும் சேர்த்துக் கொள்ள சுதந்திரகட்சி பிரமுகர்கள் சிலர் முயற்சி செய்வதாகவும் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த இரு எம். பி. க்களுக்கு ஒரு மந்திரி பதவியும் ஒரு உதவி மந்திரிப்பதவியும் அளிக்க முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## 40 தமிழ் பொலிஸார் யாழ்ப்பாணம் வருவர்

### பல பகுதிகளில் பொலிஸ் நிலையங்களும் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் அதிகரித்து வரும் குற்றத்தைத் தடை செய்யும் நோக்கத்துடன் யாப்பாணப் பொலிசாரின் குற்றத் தடுப்புப் பகுதியின் நடவடிக்கைகளை விஸ்தரிக்க பல பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் நிறுவுவதற்கு யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிகிறது.

அத்துடன் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் பொலிஸ் அதிபரும் எடுததுக்கொண்ட முயற்சியின் பலனாகவும் அரசாங்கத்தின் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைக்கு இணங்கவும் தமிழில் கொடுக்கும் வாக்குமூலங்களை தமிழிலேயே பதிவு செய்வதற்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் தென்னிலங்கையில் கடமையாற்றும் தமிழ் பேசும் 35 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் 5 பொலிஸ் சார்ஜன்ட்களும் யாழ்ப்பாணப் பகுதிப் பொலிஸ் நிலையங்களுக்கு மாற்றப்படவிருக்கின்றனர்.

## மொழிவழி பிரிந்த தொழிற் சங்கங்கள் சம்மேளனம்

நல்லூர், புதன்

மொழிவழி பிரிந்த தொழிற் சங்கங்களின் சம்மேளனம் உருவாக்கப்படுவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் இவ்வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

மேதின விழாவை மொழிவழி பிரிந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனம் பொறுப்பேற்று நடத்துமெனத் தெரிகிறது. அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் தொழிற்சங்க சம்மேளனம் உருவாவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள சுமார் 12 தொழிற்சங்கங்களுக்கு அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் கூட்டு மேதின விழாபற்றியும் தொழிற்சங்க சம்மேளனம் உருவாகுவதுபற்றியும் சுற்றிருபம் அனுப்பியுள்ளது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நிர்வாகிகள் இவ்வாரம் யாழ்ப்பாணம் வந்து சேருவார் எனவும் இவ்வார இறுதியில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுமெனவும் அறியப்படுகிறது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சங்கங்களையும் இணைத்து மேதினவிழாவை அவ்வப்பகுதியிலும் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமையில் கூட்டாக நடைபெறவிருக்கும் மேதினவிழாவில் ஊர்வலங்கள் பலபகுதிகளிலும் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## இசைவிழா

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை இசையாசிரியர் சங்கத்தின் ஆண்டு நிறைவுவிழா இன்று யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் மாலை 6 மணியளவில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைப்பட்டதாரியான சங்கீதபூஷணம் செல்வி தருமலெட்சுமி செல்லத்துரையின் இசையரங்கேற்றம் நடைபெறும், இவ்விழாவில் இசையாளர்கள் பலர் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள்.

## தோட்டப்பிள்ளைகளுக்கு 8-ம் வகுப்பு வரை கல்வி வசதி

### முதலாளிமாரிடம் இ. தொ. கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

தோட்டபபகுதிப் பாடசாலைகளில் அடுத்த வருடம் தொடக்கம் எட்டாம் வகுப்புவரை கல்வி வசதியளிக்க வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் கழகம் இலங்கை தோட்ட முதலாளிமார் சங்கத்தைக்கேட்டுள்ளது.

தோட்டப் பாடசாலைகளில் புதியபாடங்களையும் போதித்து இப்பொழுதுள்ள கல்வித் தரத்தை உயர்த்தி அரசாங்க பாடசாலைகளின் கல்வி தரத்துக்கு கொண்டுவரவேண்டும் எனவும் இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இலங்கை தோட்ட முதலாளிமார் சங்கக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள மகஜரில் கேட்டுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தோட்டப்பிள்ளைகளின் கல்வி மாற்ளுந்தாய் முறையில் அமைந்துள்ளது கவலைக்கிடமானது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் பலவருட காலமாக தக்க கல்வி இல்லாமல் இருக்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்திருப்பது நாட்டுக்கும் தோட்ட கைத்தொழிலுக்கும் பாதகமானதாக இருக்கும். தோட்டப் பிள்ளைகளின் கல்விக்கு தோட்ட முதலாளிமார்கள் மட்டுமே பொறுப்பானவர்கள் இல்லை என்பது எமக்குத் தெரியும். இருந்த போதிலும் இப்பொழுதுள்ள சட்டத்தின் கீழ் செய்யக்கூடிய வற்றையே நாம் கேட்கின்றோம்.

பெற்றோர்கள் 5 தொடக்கம் 14 வயது வரையான பிள்ளைகளை பாடசாலைககு அனுப்ப வேண்டுமென தற்போதைய சட்டம் கூறுகிறது. ஒரு மாணவன் 10 வயதிலே ஐந்தாம் வகுப்பு படிப்பான். தோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புக்கு மேலில்லாமையால் 10, 14வயது வரையான தோட்டப் பிள்ளைகள் கல்வி வசதியற்றிருக்கிறார்கள். இந்த நிலையில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும்.

இது பற்றி சங்கத்தை பேட்டிகாணவும் விரும்புவதாக மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் எம். பி. க்கள், பிக்குகள் பங்குபற்றும் சிரமதானம்

நல்லூர், புதன்

நீர்வேலி கைதடி வீதியை சிரமதானம் மூலம் அமைக்கும் முயற்சி வருகிற திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. தமிழ் எம். பி.க்கள் பௌத்த பிக்குகளுடன் மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரும் சிரமதான முகாமில் பங்கு கொள்வர்.

சிரமதான முகாமில் கலந்து கொள்ள தென்னிலங்கையிலிருந்துவரும் ஏராளமான சிங்கள மக்களுடன் பௌத்தபிக்குகளும் வரவிருப்பதாகத் தெரிகிறது. பல தமிழ் எம். பி.க்களும் இந்த சிரமதான முயற்சியில் ஈடுபடுவார்கள்.

சிங்கள தமிழ் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி வலுப்படுதத இந்த சிரமதானமுகாம் பயன்படவேண்டுமென பலரும் தெரிவித்துள்ளனர், காந்தீய சேவா சங்கம் சிரமதானமுகாம் அமைப்பதற்கான ஏற்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளது

திங்கட்கிழமை காலை சிரமதான வேலைகள் ஆரம்பிக்கப்படும். நீர்வேலி-கைதடி வீதி அமைக்கும் முயற்சியில் பாடசாலை விடுமுறைக் காலமாதலால் மாணவர்கள் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர் ஏராளமானவர்கள் இந்த முயற்சியில் ஈடுபடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## பூட்டானில் 31 பேர் கைது

புதுடில்லி, ஏப். 14

பூட்டான் பிரதமர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக 31 பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாயும், இவர்களில் பூட்டான் உதவிப் பிரதம சேனதிபதியும் ஒருவர் எனவும் அறிவிக்கப்பட்டது.

## நிஜாமின் வாரிசு

புதுடில்லி. ஏப். 14

ஹைதராபாத நிஜாமின் வாரிசாக அவரது பேரர் இளவரசர் முகரம்ஜாவை இந்திய அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது.

## மகன் கொலை; தந்தை காயம்

### புத்தாண்டு தினத்தில் அளவெட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம்-பளை வாலிபர் சங்க ஆதரவில் சென்ற ஞாயிறு நடைபெற்ற வண்டில் சவாரியைத் தொடர்ந்து வருடப்பிறப்புத் தினத்தில் ஏற்பட்ட ஒரு தகராறின் காரணமாக அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சின்னததம்பி சுந்தரராசா என்பவரும் அவருடைய தந்தை வேலுப்பிள்ளை சின்னத்தம்பியும் கத்தியால் வெட்டப்பட்டனர் என்றும் சுந்தரராசா யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானாரென்றும், தந்தை சின்னத்தம்பி படுகாயத்துடன் ஆபத்தான நிலையில் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கத்தியால் வெட்டியதாகச் சொல்லப்படும் இளைய தம்பி வைத்திலிங்கம் கல்லாலும் பொல்லாலும் அடித்ததாகச் சொல்லப்பட்ட காயங்களுடன் ஆஸ்பத்திரியில் பொலிஸ் காவலுடன் அனுமதிக்கப்பட்டுள்

(6-ம் பககம் பார்க்க)

## மணிவாக்கு

என் புத்தி, என் இதயம், என் வங்கிக்கணக்கு, என் தொழில், என் உறவுகள் முதலிய பலவிஷயங்களிலும், தெய்வநெறிப்படி நடந்து புது உலகத்தை அமைக்கவே நமது வாழ்க்கையை அர்ப்பணிப்பதென்று இப்போது நாம் தீர்மானித்துக் கொண்டால் நமது எதிர்காலம் மிகவும்மேலாகவும் சுபிட்சமாகவுமிருக்கும்.

—டாக்டர் பால்காம்பெல்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 3உ (15-4-64)

## முதலில் மொழிப்பிரச்னை தீர வேண்டும்

சென்றவார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடபிரதேச கம்யூனிஸவாலிப முன்னணியின் வருடாந்த மகாநாட்டில் மொழிப் பிரச்னையைத் தீர்க்க சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டும் அரசாங்கத்தின் யோசனையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மொழிப்பிரச்னைக்கு தேசியரீதியில் தீர்வு காண வேண்டுமென அரசாங்கக்கட்சி மட்டுமன்றி மற்ற முக்கிய அரசியல் கட்சிகளும் தலைவர்களும் வரவேற்றிருந்தனர்.

இத்தகையதொரு மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கும் ஐக்கியதேசியக்கட்சியும் தெரிவித்திருந்தது. சர்வகட்சி மகாநாடு கூட்டி மொழிப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்குரிய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் பொருட்டு தமிழரசுக்கட்சியும் தனது நேரடி நடவடிக்கையை கட்சிக்குள் தோன்றிய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இறுதி நேரத்தில் ஒத்திவைத்தது. சிங்கள அமுலில் தீவிரம் காட்டக் கூடாது என நிதிமந்திரியும் அரசாங்க இலாகாத் தலைவர்களுக்கு அறிவித்திருந்தார். இவையெல்லாம் நல்ல சூழ்நிலையையேற்படுத்தியதுடன் நாட்டின் அமைதிக்குச் சாபத்தீடாக இருக்கும் மொழிப்பிரச்னையைத் தீர்க்க விரைவில் சர்வகட்சி மகாநாடு கூட்டப்படுமென்ற நம்பிக்கையையும் மக்கள் மனதில் ஏற்படுத்தியது. ஆனல் சர்வகட்சி மகாநாடு கூட்டுவதற்கான எவ்வித முயற்சியும் செய்யப்படுகின்றதா? அந்த யோசனைபற்றி இப்போது அரசாங்கம் என்ன செய்கிறது என்பது தெரியவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூட்டு அரசாங்கம் அநேகமாக ஏற்படலாம் என்றும் செய்திகள் கூறுகின்றன. கூட்டு அரசாங்கம்சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளனவென்பதை இடதுசாரித் தலைவர்களும் அரசாங்கத் தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர். கூட்டு அரசாங்கம் அமைப்பதுபற்றி இடதுசாரிக் கட்சிகளுக்குள்ளும் அரசாங்கக் கட்சிக்குள்ளும் கருத்து வேற்றுமையை ஏற்படுத்தியிருப்பது வேறு விஷயம். ஆனல் ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட சகலகட்சிகளையும் கொண்ட மகாநாட்டைக் கூட்டி மொழிப் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியை நிறுத்திவிட்டு கூட்டு அரசாங்கம் அமைக்கும் முயற்சி நாட்டில் எந்த அளவுக்கு நன்மைபயக்கும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம்.

திரு. பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியைத் தவிர்ந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த லங்கா சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் 1956-ம் வருடத்திற்கு முன்னிருந்தே தமிழ்மொழிக்கு உரிமை அளிக்க வேண்டுமென்றுகோரி வந்திருக்கின்றன. பிலிப குணவர்த்தனவின் மொழிக் கொள்கை வேறாக இருப்பினும் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டதும் வெளியான கொள்கை அறிக்கையில் தமிழுக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இடதுசாரிக் கட்சியினர் அரசாங்கத்தில் சேர்ந்தால்தான் மொழிப்பிரச்னை தீர முடியுமென்றும் சிறுபான்மையினருக்கு உரிமைகள் கிடைக்க முடியுமென்றும் சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார். பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் திரு. பிலிப் குணவர்த்தன மந்திரியாக இருந்தபோது அந்த அரசாங்கமும் அவரும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை மக்கள் மறந்துவிடமாட்டார்கள். இந்நிலையில் அரசாங்கத்துடன் இடதுசாரிக் கட்சியினர் கூட்டு சேருவதற்கு முன்னர் மொழிப் பிரச்னைக்குச் சுமுகமான தீர்வு காண்பதே பலவிதத்திலும் நன்மை பயக்கும். இதையேதான் கம்யூனிஸ்ட் வாலிப முன்னணி மகாநாட்டுமொழித் தீர்மானமும் சமசமாஜ வாலிப சம்மேளனத்தின் வடபிரதேச கிளைத் தீர்மானமும் வலியுறுத்துகின்றதெனக் கொள்ளலாம்.

கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் மொழிப்பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்றும் இதன்மூலம் சிறுபான்மையினரின் ஒத்துழைப்பைப் பெறலாமென்பதையும் இடதுசாரித் தலைவர்கள் வற்புறுத்த வேண்டும். இல்லையேல் கூட்டு அரசாங்கம் அமைப்பதற்குமுன் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டி மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாண முயற்சிசெய்ய வேண்டுமென்பதை வலியுறுத்தலாம். சர்வகட்சி மகாநாட்டின்மூலம் இப்பிரச்னைக்கு உறுதியான, நிரந்தரமான, சுமுகமான தீர்வு காணப்படாதவரை கூட்டு அரசாங்கத்தாலோ அல்லது எவ்வித அரசாங்கத்தாலோ முன்னேற்றமேற்பட முடியாது.

மொழிப பிரச்னை தேர்தல் பிரச்னையாகவும் ஒரு கட்சிப் பிரச்னையாகவும் இருக்கும் வரை நாட்டில் அமைதியோ சமூக மக்களுக்கிடையில் ஒற்றுமையோ ஏற்படவும் முடியாது. பொருளாதார முன்னேற்றத்தையும் அடைய முடியாது. எனவே கூட்டு அரசாங்கம் ஏற்பட்டாலும் ஏற்படாவிடினும் முதலில் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டி மொழிப் பிரச்னைக்குச் சுமுகமான தீர்வுகாண வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

ஆசிரியருக்கு கடிதம்

## வட்ட மேசை மகாநாடும் அடிப்படை உரிமைகளும்

இத்தகைக்கும்பிறகு, மொழிப் பிரச்னைபற்றியும், தமிழர்களின் ஏனைய பிரச்னைகள் சம்பந்தமாகவும் சகல கட்சித்தலைவர்களையும் கொண்ட வட்டமேசை மகாநாடொன்றை நடத்த அரசாங்கம் இணங்கிக்கொண்டுள்ளது. கடந்த காலங்களில் நடைபெற்றதுபோல இனியும் தமிழரசுக் கட்சியினர் ஏமாற்றப்படமாட்டார்கள் என்றே மக்கள் நம்புகிறார்கள். அப்படியில்லாது தமிழரசுக் கட்சியினர் இனியும் ஏமாற்றப்பட்டால் அதனல் தமிழருக்கு ஏற்படக் கூடிய விளைவு சகிக்க முடியாததும், திருத்தமுடியாததுமாகவே இருக்கும். எனவே தமிழரசுக்கட்சியினர் இனியும் ஏமாற்றப்படாமல் இருக்க பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

பிரச்னைகளில் முதன்மையானதாக இருக்கும் மொழிப் பிரச்னை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தீர்க்கப்பட வேண்டியது முக்கியம்; அவர்களை இன்னல் படுத்தி இரண்டாந்தரப்பிரஜைகளாக்கும் வகையில் தீர்வு காணக் கூடாது. தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமஅந்தஸ்து கொடுக்கப்பட வேண்டியது அவசியம்; அதற்குக் குறைந்த எதையும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்படுவதுடன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு உத்தியோக மொழி அந்தஸ்து கொடுப்பதனல் நாட்டின் சகல இன மக்களும் அதை மனபூர்வமாக வரவேற்பதுடன், இரு பெரும் சமூகங்களுக்கிடையே நல்லுறவு ஏற்பட வழி பிறப்பதால் நாடும் மிக விரைவில் முன்னேறும்.

நியாயமான தமிழ்மொழி உபயோகம் தருமாறு தமிழர்கள் அரசாங்கத்திடம் பிச்சை கேட்கவில்லை; எங்களுடைய மொழியை நாங்கள் உபயோகிப்பதற்கு அரசாங்கம் அனுமதி தரவேண்டிய அவசியமும் இல்லை சிங்களவர் அனுபவிக்கும் சலுகைகளையும், உரிமைகளையும் அனுபவிக்கும் உரிமை தமிழர்களுக்கும் உண்டு. எனவே தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பதற்காக அவர்கள் மீது சிங்களத்தை திணிப்பதற்கு காரணம் எதுவுமில்லை. அநியாயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. நியாயமான தமிழ்மொழி உபயோகத்தை ஏற்றுக்கொண்டால் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படும். சிங்கள விகிதர்களும், பியோன்களும் தமிழ் ஊழியர்களை தாழ்வு மனப்பான்மையுடன் நடத்திவருவதால் பல தமிழ் ஊழியர்கள் ஓய்வுபெற்றுள்ளார்கள்; இன்னும் பலர் ஓய்வுபெறவிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள நிலைமை மாறுவிடில் தமிழ்ப் பிள்ளைகளும் சிங்களம் படிக்குமாறு பலவந்திக்கப்படுவார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர் தமிழர்கள் தங்கள் உரிமைகள் எல்லாவற்றையுமே இழந்து தமது சொந்த நாட்டிலேயே அடிமைகளாகிவிட்டனர். தமிழர்களையும், தமிழ் மொழியையும் இலங்கையிலிருந்து அழித்தொழித்துவிடுவதற்கு அரசாங்கம் திடசங்கற்பப் பூண்டுள்ளதாகவே தோன்றுகிறது.

அண்மையில் நடைபெறவிருக்கும் சர்வகட்சித் தலைவர்களின் வட்டமேசை மகாநாடு நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாக இருக்கும். தமிழர்களின் ஒத்துழைப்பும் ஒற்றுமையும் இல்லாது இலங்கை முன்னேறமுடியாது என்பது மட்டும் உண்மை. தமிழர்களின் ஒத்துழைப்பு வேண்டுமானல் அவர்களின் அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டு நியாயமான முறையில் நடத்தப்படவேண்டும்.

கே. எஸ். சவுந்தரநாயகம்,
மானிப்பாய்.

களத்துமேடு

## ஊசி போடலாமா, விடலாமா?

ஆற்றுவளம் இல்லாத ஊர் யாழ்ப்பாணம். மலைகளில்லாத ஒரே சமவெளியான பிரதேசம். வயல்களுக்கு பாய்ச்சப்படும் தண்ணீர் கிணறுகளிலிருந்தே எடுக்கப்படுகிறது. சிறு தானியம் செய்வோர் கிணற்றுத் தண்ணீரைத்தான் நம்பியிருந்தார்கள். நெல்வயல் செய்பவர்கள் கூட மாரிகாலத்தில் மழை தாமதித்து விட்டால் கிணறுகளிலும் குளங்களிலும் இருந்த தண்ணீர் பாய்ச்சுவார்கள். சிறுதானியம் செய்யும் இந்தக் கோடை காலத்தில் குளத்து நீர் வற்றிப் போகும். கிணறுதான் சிறுதானியம் செய்வோருக்கு பசுமை கொடுக்கும் ஊற்று.

முந்தின காலங்களில் புகையிலை, மிளகாய், கத்தரி, மரவள்ளி முதலிய பயிர்களுக்கு நீர் பாய்ச்சுபவர்கள் கிணற்று நீரையும் துலாக்கொடியையும் நம்பியிருந்தார்கள். ஒரு தோட்டத்துக்கு நீர் இறைப்பதற்கு நான்கு பேருடைய கூலி தேவைப்படும். இருவர் துலா மிதிப்பார்கள். ஒருவர் துலாக் கொடி பிடித்து தண்ணீர் இறைப்பார். நாலாமவர் பாத்தி கட்டுவார். காலையிலும் மாலையிலும் இந்த வேலை நடக்கும்.

இப்பொழுது சில காலமாக விஞ்ஞானம் விவசாயின் உதவிக்கு வந்த பின்பு, நாலு பேர் செய்யும் வேலையை ஒருவர் மட்டுமே செய்து முடிக்கக் கூடிய தண்ணீர் 'பம்பு'கள் வந்து சேர்ந்தன. குழாயைக் கிணற்றுக்குள் இறக்கிவிட்டு, பம்பை முடுக்கிவிட வேண்டியது தான். தண்ணீர் 'கொள கொள' என்று மணிக்கு ஆயிரம் கலன் கணக்கில் வாய்க்கால் வழியோடும். வாயி லெழுந்து தோட்டங்களைச் சுற்றிப் பார்த்தால் இன்று எங்கும் தண்ணீர் பம்புகளின் 'பட பட' ஓசை கேட்கும்.

வைதீகத்தில் ஊறிப்போயிருந்த சமக்காரர் முதலில் இந்த தண்ணீர் பம்பைப் பலமாக எதிர்த்தார்கள். இப்பவும் சிலர் அதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் என்ன தெரியுமா? தண்ணீர் பம்பிலே மின்சாரகரண்ட் இருக்கிறதாம் அது செடிகளுக்கு தீங்கு செயயுமாம்! நல்லவேளையாக இந்த மூடநம்பிக்கையை (சில முற்போக்கான விவசாயிகள் தண்ணீர் பம்பினல் நஷ்டம் இல்லையென்பதை நிரூபித்துக்காட்டி) அழித்துவிட்டார்கள்.

இதுபோன்ற மூடநம்பிக்கைகளில் சில இன்றும் உண்டு. மைக்ரோ போனில் பேசினல் தொண்டை கெட்டுவிடும் என்று நினைப்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள். புகைப்படம் பிடிப்பதற்கே சிலர்பயப்படுகிறார்கள்!

கோழிகளுக்கு நோய் தடுப்பு ஊசி மருந்துகள் போடுவதிலும் இந்தப பிரச்னை தோன்றியிருக்கிறது. மாசி தொடக்கம் ஆடி, ஆவணி வரையும் சரியான காண்டிய காலம். 6, 7 மாதமாக மழையில்லாமல் நிலம் வரண்டுபோய் கனல் தெறிக்கும். இக்காலத்தில் கோழிகளுக்கு நோய் உண்டாவது சர்வ சாதாரணம். கோழிகள் எந்த நேரமும் தரைக்கு வெகு சமீபமாக ஊசாடும் பிராணிகள். தரையிலிருந்து கிளம்பும கொடிய உஷ்ணம் அவற்றை இலகுவில் தாக்கிவிடும். அதுவும் ஒரு சிறுமழை

(5-ம பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

புது வருடப்பிறப்பன்று காலையிலே ஒரு சோதனை. வழமையாகப் பலகாரம், தேத்தண்ணீர் கொடுக்கும் கடை மூடப்பட்டிருந்தது. சரி, புது வருடம் காலையிலே பட்டினிதானு அல்லது தூரத்திலுள்ள கடைக்குச் செல்லுவதா என்று மனதில் ஒரு சின்னப் போராட்டம்.

கேவலம், இச்சிற்றுண்டிக்காக வெகுதூரம் நடந்து செல்லுவதா? 'ஆக்கைக்கே இரை தேடி அலமந்து காக்கைக்கே இரையாகிக் கழிய'வேண்டாம் என்று பாடியுள்ளனரே! அவனின்றி ஓரணுவும் தான் அசையாதென்று ஊருக்கெல்லாம் தினசரி உபதேசம் செய்கின்றோமே. நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே. இந்தக் கடவுள் என்னதான் செய்கிருர் பார்க்கலாம். அவர் கருணைவள்ளலாயிற்றே. புது வருடத்தில் பட்டினி போடுருரா பார்க்கலாம் என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

* * *

கால்மணி நேரம் கழிந்தது. என்றுமில்லாதபடி, ஒரு தட்டிலே இனிப்பு முதலான பலகாரங்களும், பாலும் எடுத்துக்கொண்டு ஒரு செல்வி வந்தார். ஆச்சரியம் தாங்கவில்லை. நாம் சும்மா இருந்தாலும் அந்தக் கடவுள் சும்மா இருக்கமாட்டான் போலும்! கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுட் தேரைக்கும் அமுதளிக்கவேண்டியது அவன் கடமையல்லவா?

பின்னர் அடுத்தடுத்து மூன்று தட்டுகளில் வேறு மூவர் பலகாரம் கொண்டுவந்தார்கள். நம்பமுடியவில்லை. இதுவரை எந்தப் புதுவருஷத்திலும் இப்படிக் கிடையாது. கடவுளைச் சற்றே சோதனை செய்துபார்த்தேன். அடாடா! அவன் கருணைக்கும் அருளுக்கும் தான் எல்லை ஏது? நாம் அவனைச் சற்றே உண்மையாக நம்பிவிட்டால், அவன் என்னென்ன செய்கின்ருன்! அவன் அருளையெல்லாம் பெறத்தான் நமக்குச் சக்தியில்லை.

இந்தச் சோதனையில் அவன் வென்றுவிட்டான் அந்த வெற்றி என் நம்பிக்கையை மேலும் பலப்படுத்துவதாகவுள்ளது. புது வருஷத்தன்று காலையிலே பலருங்கும் உணவளித்து, என்னையும் சாப்பிடும்படி செய்துவிட்டான் அக்கருணைக்கடல். புது வருஷத்தில் எனக்கேற்பட்ட இந்த முதல் அனுபவத்தை, உங்களிடம் சொலலாமலிருக்க என் மனம் கேட்கவில்லை. சொல்லிவிட்டேன்.

* * *

எங்கள் வீட்டிலே ஒரு பூனையார். அது சில நாட்களுக்கு முன்தான் நான்கு குட்டி போட்டது. பெரிய குடும்பம். மருத்துவம் ஒன்றும் கிடையாது. வருமானமுமில்லை என்றாலும் குட்டிகள் அழகாக வளர்ந்துவருகின்றன. தாய்ப்பூனைக்குத்தான் எவ்வளவு பெருமை, எவ்வளவு அன்பு.

புதுவருஷ சமாச்சாரம் அதற்குத தெரியாது! தினம் பால் கொடுக்கும் அந்த ஓட்டல் மூடப்பட்டுவிட்ட காரணம் அதற்குப் புரியவில்லை. இரவில் வீடு திரும்பியதும், வாயில்லாத அந்தப் பிராணி, பலவிதங்களிலும் தன் உணர்ச்சியைத் தெரிவித்தது. அந்த நேரத்தில் பாலுக்கு எங்கே போவது? பாவம். கடவுள் கிடவுள் என்றால் அதற்கு என்ன புரியும்?

மிஸஸ் பூனையாரின் சார்பாக பக்கத்து வீட்டிலிருந்த அன்பரைத் தயங்கித் தயங்கிக் கேட்டுவிட்டேன். அவர் என்ன செய்தார் தெரியுமா? பால் மட்டுமின்றி, ஒரு தட்டுப் பலகாரமும் சேர்த்து அனுப்பினர். பூனையின பசி தீர்ந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

# ஷேக் அப்துல்லாவின் அறிக்கை மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது

## காஷ்மீர் பிரச்னை குறித்து நேரு வெளியிடும் கருத்து

### "சுயபலத்தை இழந்தால் நாம் தொலைந்தோம்"

புதுடில்லி, ஏப்ரல் 14

மேற்கு நாடுகளின் மனப்போக்குகளினால்தான் காஷ்மீர் பிரச்னை இன்னும் தீர்க்கப்படாமலிருக்கிறது. மேற்கு நாடுகளின் மனப்போக்கு இல்லாவிட்டால் காஷ்மீர்பிரச்னை வெகுகாலத்துக்கு முன்னரே தீர்ந்திருக்கும் என்று இந்தியப் பிரதமர் நேரு அறிவித்துள்ளார்.

இந்திய லோகசபையில் வெளியுறவு இலாகா செலவுக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில்தான் பிரதமர் நேரு மேற்கண்டகருத்தை வெளியிட்டார்.

அண்மையில் விடுதலையான திரு ஷேக்அப்துல்லா வெளியிட்டுள்ள அறிக்கைகள் மிகவும் வருத்தம் கொடுக்கக்கூடியதாகவிருக்கின்றன என்றும் பிரதமர் நேரு கூறினர்.

"ஷேக் அப்துல்லா கூறியதாக பத்திரிகைகள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் முழுதும் உண்மையாகவிருக்கிறதென்று நாம் கருதக் கூடாது. பல கருத்துக்கள் உண்மையல்ல. இதுபற்றி நான் இப்பொழுது ஒன்றும் கூற முடியாதிருக்கிறது. ஷேக அபதுல்லாவைச் சந்திக்கும்பொழுது நான் பரிசீலனை செய்வேன்" என்றும் திரு. நேரு குறிப்பிட்டார்.

**இலங்கைப் பிரதமர் கடிதம்**

"சீன-இந்திய எல்லைத் தகராறுகள்பற்றி இலங்கைப் பிரதமர் அண்மையில் கடிதம் எழுதியிருந்தார். லடாக் எல்லையில் உள்ள 7 நிலைகளிலிருந்தும் சீன வாபஸ் பெற்றுக கொண்டால் எல்லைத்தகராறுகள்பற்றி சீனவுடன் பேச்சு நடத்த முடியுமா என்று அவர் யோசனை கேட்டிருந்தார். ஆனல் இந்த யோசனை சீனவிடமிருந்து வரவில்லை. இதுபற்றி சீன தெரிவித்திருந்தால் நாம் அதுகுறித்து பரிசீலனை செய்வோம்" என்றும் பிரதமர் நேரு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

**சுயபலம் அவசியம்**

"சீனவின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்கு எமக்குப் போதிய பலம் தேவை. சுயபலத்தை இழந்தால் நாம் தொலைந்தோம் என்பதை இந்திய மக்கள் நன்குணர்ந்திருக்க வேண்டும்.

கிழக்குப் பாகிஸ்தானில் சிறுபான்மைச் சமூகத்தினர் பல கொடுமையான செயல்களை அனுபவித்துள்ளனர். ஆனல் இந்தியாவிலும் பல பயங்கரச் செயல்கள் நடந்திருக்கிறதென்பதை நாம்மறந்துவிடக்கூடாது. இது எமது கௌரவத்துக்கும் கண்ணியததுக்கும் பெரும் இழுக்காகும். நமது நாட்டில் அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெற்ருல் அது நமக்கே கேடு விளைவிக்கும். இதனல் பாகிஸ்தான் விரிக்கும் வலையில் நாம் விழ்ந்துவிடமுடியும்.

**பாகிஸ்தான் உறவுகள்**

சீன, பாகிஸ்தானுடனன தகராறுகளை சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள இந்தியா விரும்புகிறது. ஆனல் எமது கௌரவததுக்கும் கண்ணியத்துக்கும் தீங்கு ஏற்படாத வகையில் இந்தப் பிணைகள் தீர்க்கப்பட வேண்டும். முக்கியமாக பாகிஸ்தானுடன் இந்தியா சமாதானமாக வாழ விரும்புகிறது. சமாதானபேச்சு வார்த்தைகள்மூலம் இந்திய-பாகிஸ்தான் தகராறுகள் தீர்க்கப்பட்டு இருநாடுகளும் மீண்டும் ஒற்றுமையுடன் சமாதானமாக வாழ வேண்டுமென்பதே இந்தியாவின் தளராத ஆசை.

**ஏழாவது கடற்படை**

இந்துசமுத்திரத்துக்கு வந்திருக்கும் அமெரிக்காவின் ஏழாவது கடற்படை இந்தியாவுககு அருகில் வராதென்றே நாம் நம்புகின்ருேம். ஆனல் இந்துமகாசமுத்திரத்தில் அணு ஆயுத கப்பலொன்று உலாவுவது வேதனைக்குரிய விஷயமாகும்.

## "சாஸ்திரியின் அறிக்கை வெறும் மிரட்டலே"

### மீண்டும் சிறைசெல்ல தயார் என்கிருர் ஷேக் அப்துல்லா

ஜம்மு, ஏப். 14

இந்திய லோகசபையில், மத்திய மந்திரி திரு லால்பகதூர் சாஸ்திரி வெளியிட்டுள்ள கருத்துகள் ஒரு மிரட்டலாகி இருக்கிறதென்று திரு. ஷேக் அபதுல்லா தெரிவித்துள்ளார்.

ஜம்முவில் பாடர்வாடு என்ற இடத்தில் நடைபெற்ற முஸ்லிம்களின் பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பேசுகையில்தான் திரு. ஷேக் அப்துல்லா மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இந்தியாவிலிருந்து காஷ்மீர் பிரிந்துசெல்லவேண்டுமென்று பிரசாரம் செய்யச் சுதந்திரம் இருக்காது என்று திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார். திரு. சாஸ்திரியின் அறிக்கை ஒரு மிரட்டலைத்தான் கொடுக்கிறது. காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை நான் கைவிடப்போவதில்லை. இதற்காக மீண்டும் சிறை செல்ல நான் தயாராக இருக்கின்றேன்" என்றும் திரு. ஷேக் அப்துல்லா தெரிவித்தார்.

**சக்ஸேனா கருத்து**

திரு ஷேக் அப்துல்லா வெளியிட்டுள்ள கருத்துக்கள் குறித்து இந்திய மத்திய மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி வருத்தம் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரிவினையை ஆதரித்து திரு. ஷேக் அப்துல்லா பிரசாரம் செய்தால் அவர் மீது சட்டப்படி நடவடிக்கையெடுக்கப்படுமென்று இந்திய கல்வி மந்திரி திரு. சக்ஸேனா தெரிவித்துள்ளார்.

பேச்சுச் சுதந்திரத்துக்குக் கட்டுப்பாடு கிடையாது ஆனல் விடுதலையடைந்த ஒருவர் நாட்டுக்கு விரோதமான முறையில் எந்தவிதக் கருத்தும் வெளியிட்டால் அது சட்டப்படி குற்றமாகும் என்றும் திரு. சக்ஸேனா தெரிவித்துள்ளார்.

---

## கல்கத்தா நகரில் குண்டுகள்

கல்கத்தா, ஏப். 14

மத்திய கல்கத்தாவில் ஒரு கட்டிடத்திற்கு அண்மையில் திறந்த வெளியில் 30 எறிகுண்டுகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்தக்குண்டுகள், பூமிக்குள் புதைத்து வைககப்பட்டிருந்தன.

## தென் ரொடீஷிய புதிய பிரதமர்

சாலிஸ்பரி, ஏப். 14

தென் ரொடீஷியாவின் பிரதமர் திரு. வின்ஸ்டன் பீல்ட் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். புதிய பிரதமராக திரு சிமித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளர்.

தென் ரொடீஷியா விரைவில் சுதந்திரம்பெறதாம் முயற்சிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

---

## யுதாண்ட் கட்டளைகள்

நியுயோர்க், ஏப். 14

ஐக்கிய நாடுகளுக்கான கட்டளைகளை ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வெளியிட்டுள்ளார்.

ஐ. நா. சமாதானப்படைகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மட்டுமே பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டுமென்றும் ஆனல் இந்தப் பலாத்காரம்கூட அதிகமாக இருக்கக்கூடாதென்றும் அவர் அறிவித்துள்ளார்.

பலாத்காரத்தை எப்போது உபயோகிப்பது என்பது, சம்பந்தப்பட்ட ஸ்தலத்திலுள்ள தளபதியின் யோசனைக் கிணங்கியிருக்க வேண்டும் என்றும் யுதாண்ட் அறிவித்துள்ளார்.

---

## மே. ஜெர்மன் பத்திரிகையின் விஷமம்!

மாஸ்கோ, ஏப். 14

மேற்கு ஜெர்மனியிலிருந்து வெளியான ஒரு பத்திரிகை, "சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் இறந்து விட்டார்" என்று வெளியிட்ட ஒரு செய்தியை சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' வனமையாகக் கண்டித்து, பிரதமர் குருஷ்சேவ் உயிருடன் இருக்கிருர் என்று தெரிவித்துள்ளது.

பிரதமர் குருஷ்சேவ் தமது 70-வது பிறந்த தினத்தைக் கொண்டாடவிருக்கிருர். அவர் சுகமாகவிருக்கிருர்" என்றும் 'டாஸ்' தெரிவிததுள்ளது.

---

## லஞ்ச ஊழல் மந்திரிகள்

புதுடில்லி, ஏப். 14

லோகசபையில் நேற்று சுதந்திரக்கட்சி அங்கத்தவர் மகாராணி காயத்தரிதேவி பேசுகையில்; லஞ்ச ஊழலில் சம்பந்தப்பட்ட மந்திரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படவேண்டுமென்றும் கூறினர்.

---

## சந்திரனுக்கு கார்!

நியுயோர்க், ஏப். 14

சந்திரனில் மனிதன் இறங்குவதற்கு முன்னதாக 100 ருத்தல் நிறையுள்ள 'கார்' ஒன்று சந்திரனுக்குப் போய்ச்சேர்ந்துவிடக்கூடுமென்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகின்றனர். சந்திரனில் வான்வெளிக் கப்பல் இறங்குவதற்கான இடத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டு 'கார்' வடிவமான நிலச்சமன்படுத்தும் இயந்திர மொன்றை அனுப்புவது குறித்து அமெரிக்க அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

# 2-வது ஆசிய-ஆபிரிக்க மகாநாடு

## மார்ச் 10-ல் நடைபெறும்

ஜாகர்த்தா, ஏப். 14

ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் இரண்டாவது உச்சி மகாநாட்டை அடுத்த வருடம் மார்ச் மாதம் 10-ம் திகதி ஆபிரிக்க நாடொன்றின் தலைநகரத்தில் கூட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கு நடைபெற்ற ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் ஆயத்தக கூட்டம் நேற்று முடிவடைந்தது. இரண்டாவது உச்சி மகாநாடு எப்பொழுது நடைபெறவேண்டுமென்பதை, ஆயத்தக்கூட்டத்தின் தலைவர் டாக்டர் சுபந்திரியோ நேற்று அறிவித்தார்.

இரண்டாவது உச்சி மகாநாடு எப்பொழுது நடைபெறும் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. மகாநாட்டிற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது உச்சி மகாநாட்டுக்கு சோவியத்யூனியனும் அழைக்கப்படவேண்டுமென்று இந்தியா தெரிவித்திருந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தக் கோரிக்கைக்கு இலங்கை ஆதரவு தெரிவித்திருந்தது. ஆனல் பாகிஸ்தானும் சீனவும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் இரண்டாவது மகாநாடு எங்கு நடைபெறவேண்டுமென்பதை ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் ஒரு சில மாதங்களுக்குள் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# கி. பாகிஸ்தான் புயலுக்கு 250 பேர் பலி!

## பல கிராமங்கள் சேதமடைந்தன

டாக்கா, ஏப். 14

கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த சனிக்கிழமை இரவு வீசிய கடும் புயலுக்கு இதுவரை 250 பேர் பலியாகியுள்ளனர் என்றும் 500-க்கு மதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புயலினல் ஜெஸ்ஸோர் ஜில்லா மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனுடன் இரண்டு சப்-டிவிஷன்களும் பாதிக்கப்பட்டுள்ளன

கடந்த சனிக்கிழமை இரவு வீசிய இக்கடும் புயலினல் ஏராளமான வீடுகளும் கட்டிடங்களும் முற்ருக சேதமடைந்துள்ளன. பல பகுதிகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளன. ஏராளமான கிராமங்கள் முற்ருக சேதமடைந்துள்ளன.

புயலுக்குப் பலியான 500 பேரில் 131 பேரைக் காணவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ராதா கிருஷ்ணன் அனுதாபம்**

பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்கு இந்தி யராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் அனுப்பிய அனுதாபச் செய்தியில்; புயலினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவின் அனுதாபத்தைத் தெரிவிக்குமாறு குறிப்பிட்டுள்ளார்.

---

அத்துமீறும்

# பகை விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும்

## இந்திய பாதுகாப்பு மந்திரி அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 14

இந்தியப் பிரதேசத்தில் அத்துமீறிப் பறக்கும் பகை விமானங்களைச் சுட்டுவீழ்த்தும்படி இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் அறிவித்துள்ளார்.

இந்திய மத்திய மந்திரி திரு லால்பகதூர் சாஸ்திரி நேற்று லோகசபையில் பேசுகையில் ஜம்மு-காஷ்மீர் எல்லையைப் பாகிஸ்தானியர் பல தடவைகள் மீறிவிட்டனர் என்றும் அண்மைக் காலத்தில் இச்செயல் அதிகமாகக் காணப்பட்டதென்றும் கூறினர்.

பாகிஸ்தானியர்கள் எல்லைக் கோட்டை மீறி இந்தியப் பிரதேசத்துக்குள் நுழைந்திருப்பது, அவர்களின் பலாத்காரத்தையே காட்டுகிறதென்றும் பாகிஸ்தானியர்களின் இவ்வன்முறைச் செயல்கள் இப்பொழுது அதிகரித்திருக்கிறதென்றும், இம்மாதம் 9, 11-ம் திகதிகளிலும் அவர்கள் நமது எல்லைக்குள் பிரவேசித்திருக்கின்றனர் என்றும் அவர் கூறினர்.

பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் பேசுகையில் இந்திய எல்லைமீது அத்துமீறிப் பறக்கும் பகை விமானங்களைச் சுட்டு வீழ்த்தும்படி தாம் உத்தரவிட்டிருப்பதாகக் கூறினர்.

நேற்று நடைபெற்ற லோகசபைக் கூட்டத்தில் பாகிஸ்தானின் போக்கைப் பல அங்கத்தவர்கள் கண்டித்துப் பேசினர்.

## குருஷ்சேவுக்கு ஜோன்ஸன் பாராட்டு

வாஷிங்டன், ஏப். 14

'ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ், உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு உறுதி கொண்டிருப்பது பற்றித் திருப்தியடைகின்றேன். அண்மையில் திரு குருஷ்சேவ், ஹங்கேரியில் நிகழ்த்திய உரைகள் சமாதான ரீதியிலேயே இருந்தன' என்று அமெரிக்க அதிபர் திரு ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீ ஏழுமலையான் மார்ச் மாத வருமானம் ரூ. 8 லட்சம்!

திருமலை, ஏப். 14

ஸ்ரீ ஏழுமலையானுக்கு மார்ச் மாதத்தில மட்டும் உண்டியலிலிருந்து ரூ 7,73,971.83பைசா வருமானம் கிடைத்துள்ளது. இதர வருமானங்கள் இக்கணக்கில் சேர்க்கப்படவில்லையாம்.

---

## மாவு ஆலைகளை அரசாங்கம ஏற்கும்

அல்ஜியர்ஸ், ஏப். 14

அல்ஜீரியாவில் மாவு அரைக்கும் ஆலைகளும் உணவுத் தொழில்களும்தேசிய உடைமையாக்கப்படுமென்று அல்ஜீரிய அதிபர் பென்பெல்லா அறிவித்துள்ளார்.

சினிமா விமர்சனம்

# அநுராதா

‘ரசிகன்’

வைத்தியக் கல்லூரியில்படத்தின்கதைஆரம்பமாகிறது. ஒரு பெரிய டாக்டராகி உலகத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற தன் தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றவைத்தியக்கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் கிருஷ்ணன் சந்தர்ப்பவசத்தால் சக மாணவி ஒருத்தியிடம் மனமிழந்து போகிறான். இதனால் கல்லூரியிலிருந்து விலக்கப்படுகிறான். அவனது அன்புக்குப் பாத்திரமான மாணவி அநுராதாவுக்கு இதற்குப் பிறகு அவனிடம் தீராதகாதல் ஏற்படுகிறது. ஆனால் கிருஷ்ணன் தன்தாயின் வாக்கைக் காப்பாற்ற தன் சொந்தச் செலவில், மேற்கொண்டு படிப்பதற்கு இங்கிலாந்துக்குப் போய்விடுகிறான். அவன் படிப்புக்குக் கடன் கொடுத்தவர் அந்தப் பணத்தையே வரதட்சிணையாக வைத்துக்கொள்ளும்படி கூறி, கிருஷ்ணனின் தகப்பனாரிடம் தன் குமாரியின் கல்யாணத்துக்கு வாக்குப்பெற்றுவிடுகிறார். தமது மகளுக்கு நாகரிகம் கற்றுக் கொடுக்குமாறு அவருடைய புதல்வியை சகோதரர் பிள்ளையான அநுராதாவிடமே கொணர்ந்து ஒப்படைத்தது முதல் கதையில் உணர்ச்சி ஓட்டம் பிரவாகமெடுக்கிறது.

லண்டனில் கல்விகற்கும் நாகரிக மாப்பிள்ளையின் மனையாள் ஆகப்போகும் லட்சமிக்கு நாகரிக அந்தஸ்து கற்றுக் கொடுக்கும் நாளில் அவளுக்குப் பதிலாக தானே கிருஷ்ணனுக்கு கடிதம் எழுதுவதும், கடிதம் ஊட்டிய மனக்களிப்பினால் ஏற்பட்ட அஜாக்கிரதை காரணமாக ரசாயன பரிசோதனைச்சாலையில் ஒரு விபத்துக்குள்ளாகி இரு கண்களும் பார்வை இழந்து ஊர் திரும்பியபோது அதே லட்சமியாக புனைபெயரில் மறைந்து நின்றே அநுராதா அவனுக்கு தூய அன்புப்பணி செய்வதும் படிப்புக்குக் கடன் கொடுத்த பெண்வீட்டார் பார்வையற்றவனுக்குப் பெண்ணைத்தர மறுத்து விடுவதும் ஐரோப்பிய நாகரிக ஏணிப்படியில் கால்வைத்து மேலே சென்றஅவர்கள் கிழவன் முதல் குமரிவரை மறுபடி அங்கிருந்து இறங்கமாட்டாமல் குதித்துக் கும்மாளமடித்துப் பரிதாபகரமாக அள்ளுண்டு போய்விடுவதும் கதைப்போக்கில் விறுவிறுப்பையும் உணர்ச்சி ஓட்டத்தையும் உண்டுபடுத்தும் கட்டங்களாக உள்ளன.

“தியாகத்தில்தான் அமைதி ஏற்படுகிறது” என்று கூறும் அநுராதா, கிருஷ்ணனுக்குப் பார்வை மீண்டபோது அவனுக்கு நிச்சயமான பெண்ணே அவன் முன்னால்நிற்க வேண்டி, தான் மறைந்துவிடுகிறாள். கிருஷ்ணனோ தனக்கு மறுபடி பார்வையே வேண்டாமெனக் கதறுகிறான்.

முடிவில் ஒளிஇழந்த கண்கள் ஒளிபெற்று அன்பினால் பிணைந்தவர்களின் வாழ்விலும் புதுஒளி பிறக்கிறது.

ராதையையும் கிருஷ்ணனையும் போல பில்வமங்களையும் சிந்தாமணியையும்போல அநுராதாவும்கிருஷ்ணனும். ஒன்று சேருகிறார்கள்.

அநுராதாவாக நடிகையர் திலகம் சாவித்திரியும் டாக்டர் கிருஷ்ணனாக நாகேஸ்வரராவும் அற்புதமாக நடித்திருக்கிறார்கள்.

புத்தமைப்பும் புதுநிர்வாகமுமாய் புத்தாண்டு தினத்துடன் புதுமலர்ச்சி பெற்ற ஸ்ரீமனோகரா தியேட்டரின் புது வாழ்வு நல்லகதையும் நடிப்பும் கலைஅம்சமும் கொண்ட இப்படத்துடனே சுபசோபனமாக திங்களன்று ஆரம்பமாகியது. படத்தில் அங்கங்கு சில காட்சிகளில் காணப்படும் ஒலி ஒளி அமைப்புக் குறைபாடுகளை தியேட்டரில் புதிதாக அமைக்கப்பட்ட நவீன ஒலி ஒளி அமைப்பு ஈடு செய்துவிட்டமை குறிப்பிடத் தக்கது.

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் பத்துதினங்களாக நடந்த அலங்கார உற்சவத்தின் போது கந்தபுராண விரிவுரை நிகழ்த்திய வண்ணை வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான வித்துவான் ஆசிரியர் திருப்பூங்குடி வி. க. ஆறுமுகத்தைப் பாராட்டுமுகமாக சனிக்கிழமை ஒரு கூட்டம் நடைபெற்றது. நல்லூர் தேவஸ்தான வித்துவான் முத்தமிழ்மணி வண்ணை வி. எஸ். எஸ். மணிபாகவதர், திரு. ஆறுமுகத்திற்கு உருத்திராக்க மணியும், தங்கப்பதக்கமும் அணிவித்து கௌரவித்தார். கதாப்பிரசங்கம் செய்வதில் திரு. ஆறுமுகத்துக்கு உள்ள திறமையை பாராட்டி திரு. மணிபாகவதர் பேசினார்.

திரு ஆறுமுகம் தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

## பாம்பு தீண்டி மரணம்

பளை, செவ்வாய்

இயக்கச்சி ஊர்வாசியும் குணபாலசிங்கம் என்பவரின் தந்தையுமான பண்டா என்பவர் கடந்த சனி இரவு இயக்கச்சிக் கிராமத்துக்கருகில் உள்ள காட்டில் வேட்டையாடச் சென்றபோது நாகம் தீண்டி ஞாயிறு இரவு மரணமானார்.

இவர் வேட்டைக்குச் செல்லும் வழியில் கிடங்கொன்றைக் கடக்கும் சமயத்திலேயே பாம்பு கடித்ததாக இவருடன் துணையாகச்சென்றவர் கூறினார். சிகிச்சை அளிப்பதற்காக மானிப்பாயிலுள்ள ஒரு விஷக்கடி வைத்தியரிடம் எடுத்துச் செல்லும் வழியிலேயே இவர் காலமானார் எனக் கூறப்படுகிறது.

## மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மானிப்பாய், திங்கள்

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழையமாணவர்சங்கவருடாந்த விழா திருவி.வீரசிங்கம்தலைமையில்மானிப்பாய் இந்துக் கல்லூரிஹட்சின்சன் மண்டபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கு மேற்பட்ட பழைய மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். புது வருட உத்தியோகஸ்தர்கள் வருமாறு:-

தலைவர்: திரு. வி. வீரசிங்கம் உப தலைவர்கள்: திரு க. முத்துவேற்பிள்ளை, திரு. சி இராசேந்திரம், திரு. மு. பேராயிரவன், திருமதி ப. ஆறுமுகம்.

கௌரவ காரியதரிசி: திரு எஸ். ரி. சாறீ. உதவிக் காரியதரிசி: திரு, மு. சுப்பிரமணியம். தனாதிகாரி: திரு. சிவமுத்துக்குமாரசாமி. நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் சி. பத்மநாதன், எஸ். ராஜா. க. தெய்வேந்திரம், ரா. காசிநாதன், சு. நவரத்தினம், எஸ். சண்முகசேகரம், க. சோமாஸ்கந்தன், ம. சிவபாலராசா, டேவிட் மெடோஸ், ஸ்ரீமதி எஸ். இராமலிங்கம்.

காலஞ் சென்ற கல்லூரியின் உப அதிபர் திரு. ஆர். சிவதாசனின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேறியது. அவரது நினைவாகக் கட்டப்படவிருக்கும் விளையாட்டு அரங்குக்கு ஆதரவு கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## ஓய்வுபெறும் ஆசிரியர்



பருத்தித்துறை, திங்.

புலோலி மெதடிஸ்த பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு ஜோ. மு. ஆழ்வாப்பிள்ளை தமது நாற்பத்தொரு வருட ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாறுவதை முன்னிட்டு சேவைநலம் பாராட்டும் விழாவொன்று பாடசாலையில் பொதுமக்கள் சார்பில் நடாத்தப்பட்டது.

புலோலிக் கிராம சபையின் தலைவர் திரு. சி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முன்னாள் பதில் வித்தியாதிபதிபதி திரு. கே. அருள்நந்தி அன்னாருக்குப் பொன்னாடைபார்த்திக் கௌரவித்தார்.

மெதடிஸ்த பாடசாலைகள் முன்னாள் முகாமையாளர் திரு. ஏ.டபிள்யு. இராசதுரை உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

வட்டாரப் பரிசோதகர் திரு. வி. தர்மசங்கரி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு; சி. கந்தசாமி, ஆசிரியர் மாற்றச் சபைக காரியதரிசி திரு. வே. நடராசா, அ. இ. த. ஆ. ச உப தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம், ஆசிரியர் திரு. க. ஈசுரபாதம், பண்டிதர் திரு. இ. கனகசபாபதி ஆகியோர் பாராட்டுரைகள் நிகழ்த்தினர்.

வாழ்த்துமடல்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன் விழாச் சபையின் சார்பில் அதன் தனாதிகாரி திரு. க. கணபதிப்பிள்ளை வானொலிப் பெட்டியொன்றை அன்பளிப்பாக வழங்கினர்.

மாணவிகளது நடனவிருந்துடனும் செயலாளர் திரு. டி. எம். இராசலிங்கம் நன்றி கூறுதலுடனும் விழா நிறைவெய்தியது.

## சைக்கிள் ஓட்டப் போட்டி

உடுப்பிட்டி, ஞாயிறு

வட கருணைவளர்மதி விளையாட்டுக்கழகத்தாரால் நடாத்தப்பட்ட 15 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி உதவிப் பொலிஸ் அதிபர் திரு வி. கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

போட்டியை வல்வெட்டித்துறை பொலிஸ் அதிபர் ஆரம்பித்துவைத்தார். மத்தியஸ்தர்களாக சமாதான நீதிபதி திரு. மு. யோகலிங்கம், திரு. க. இரத்தினசிங்கம், திரு சி. க. சேந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

முதலாவது இடத்தை நவிண்டில் தபால் கந்தோர் அதிபர் எஸ். சிவலிங்கமும் இரண்டாவது இடத்தை துன்னாலையைச் சேர்ந்த திரு. ஞானமும் சுவீகரித்துக்கொண்டனர்.

போட்டி முடிவில், கலந்துகொண்ட வீரர்கள் அனைவருக்கும் செயலாளர் திரு. கா. இராசையா விருந்துபசாரம் அளித்தார்,

## ரஷ்ய விண்வெளிக் கப்பல்

மாஸ்கோ, ஏப். 14

புதிய விண்வெளிக் கப்பல் ஒன்றை ரஷ்யா அனுப்பியுள்ளது.



GC/101



# "தமிழ்ப்பிள்ளைகளிடம் உள்ள குருபக்தி வழிகாட்டுகிறது"

நல்லூர், புதன்

"ஆசிரியர்களைக் கௌரவிக்கும் பண்பு மாணவர்கள் மத்தியில் வளரவேண்டும். குருபக்தி நிறைந்த மாணவர்களாகத் தமிழ்ப் பிள்ளைகள் இருப்பது ஏனைய மாணவர்களுக்கு வழி காட்டுவதாக உள்ளது" என்று ஆசிரியர் திரு. ஆ. வே. சிற்றம்பலம் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 38 ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்து இளைப்பாறும் திரு. ஆ. வே. சிற்றம்பலத்தின் சேவைநலம் பாராட்டு வைபவம் கல்லூரி அதிபர் தெ. து. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. சிற்றம்பலத்தின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்த யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தமதுரையில் கூறியதாவது:

நாவலரின் முயற்சியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் தமிழ்மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். சைவ மக்கள் மத்தியில் சமய உணர்வைத் தட்டி எழுப்பியவரான நாவலரின் சமய மறுமலர்ச்சி இயக்கம காரணமாக யாழ் பாணத்தின் பல்வேறு பாகங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நாவலர் ஏற்படுத்திய சமய விழிப்புணர்ச்சியால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைகள் தமது நோக்கங்களைத் தொடர்ந்து செயலாற்றிவருகின்றன. தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆசிரியர்களுக்குரிய கௌரவத்தை வழங்க முன்னிற்பவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஆசிரியர்கள் தமது கல்விச் சேவையை ஊக்கத்துடன் செய்துவரவேண்டும். ஒரு நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்குகின்ற கடமை ஆசிரியர்களையே சார்ந்தது. இத்தகைய நிலையில் ஆசிரியர்களை ஊக்குவிக்க மாணவர்களும் பழைய மாணவர்களும் முயற்சிக்கவேண்டும்".

திரு. ஆ. வே. சிற்றம்பலம் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

அவரின் சேவை நலனைப் பாராட்டி திருவாளர்கள் வ. சரவணமுத்து, கா. கதிர்காமத்தம்பி, சின்னத்துரை, டாக்டர் சுப்பிரமணியம் ஆகியோருட்பட பலரும் பேசினர். ஆசிரியர் திரு. த. சண்முகசுந்தரம் நன்றி கூறினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### 15-4-64 புதன்

### கொழும்பு

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கீதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 நேயர் விருப்பம், 7-15 பேச்சு—'விஞ்ஞானம்'-வி. கே. நல்லையா, 7-30 வயலின்—பரஞ்சோதி பரராஜசிங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 ராம் குமாரசாமி — பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

காலை 6-30 மங்கள இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக்கோவை - செம்பொன்னார் கோயில் ஆர். டி. வைத்தியநாதன், ஆர். டி. முத்துக்குமாரசாமி—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 டி. சி. சிவலிங்கம்—பாட்டு.

மாலை 5-15 சரஸ்வதி ராஜகோபாலன்—வீணை, 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-45 சானரம்-கதம்ப நிகழ்ச்சி, 8-00 திரைப்பட இசை, 8-45 குரலிசை, 9-50 இசைமாலை, 10-00 சரஸ்வதி ராஜகோபாலன் - வீணை.

## ஊசி போட . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோடையில் பெய்து விட்டால் போதும். மழைத்துமி விழுந்தவுடனே நிலப்புழுதியிலிருந்து கூடு புறப்பட்டு முதலில் தாக்குவது கோழிகளைத்தான். பலவிதமான நோய்கள் தோன்றும்.

இந்த நோய்களைத் தடுப்பதற்காக விவசாயப் பகுதியினர் கிராமங்கள் தோறும் தடுப்பு ஊசிகள் போடுவார்கள். விவசாயப் போதனாசிரியர் முன்னறிவித்தல் கொடுத்து ஊசி மருந்துடன் கிராமத்துக்கு வருவார்கள். ஆனல் பல இடங்களில் கிராமவாசிகள் இந்த ஊசி மருந்து போடுவதை விரும்புவதில்லை. இலவசமாகக் கொடுக்கப்படும் அந்த மருந்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. அரசாங்கம் உதவி செய்ய முன்வந்தாலும் பொது மக்கள் அதை உபயோகப்படுத்தவில்லை. காரணம் என்ன தெரியுமா? ஊசிமருந்து போட்டால் கோழிகள் முட்டையிடுவது குறைந்து போகிறதாம்! ஒருவர் இருவரல்ல, பலரும் இந்த நியாயத்தை எடுத்துக் கூறுகிறார்கள்.

இதில் உண்மை இருக்கிறதா என்பதை விவசாயப் பகுதியார் கொஞ்சம் சோதனை செய்து பார்த்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது. விவசாய கமங்கள் நாடு முழுவதும் இருக்கின்றன விவசாய முன்னேற்றத்துக்கான பலவிதமான பரிசோதனைகள் இங்கு நடக்கின்றன கோழிகளுக்கு ஊசி போடுவதால் முட்டையிடுதல் குறைகிறதென்று பொதுசனங்கள் கூறுகிறார்கள். ஊசிபோடாமல் விட்டால் நோய் வருகிறதென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஊசி போடாமல் விட்டு கோழிகள் இறப்பதாலோ, அல்லது ஊசிபோட்டு கோழிகளின் முட்டையிடும் சக்தி குறைவதாலோ, கூடிய நஷ்டம் ஏற்படுகிறதென்பதை புள்ளி விபரக் கணக்குகளுடன் ஆராய வேண்டும்.

—"கலப்பை"

## நயினதீவில் முத்தமிழ் விழா

ஊர்காவற்றுறை, திங்கள்

நயினதீவு மகாவித்தியாலய விளையாட்டு முன்றலில் நயினை மணிபல்லவகலாமன்றத்தாரின் முத்தமிழ்விழா இம்மாதம் 16ந் திகதி நடைபெறவிருக்கிறது.

தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இயல் அரங்கு, கருத்தரங்கு, இசை அரங்கு, நாடக அரங்கு என்பன நிகழ்ச்சிகளாக இடம் பெறுகின்றன. இயல் அரங்கில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம், வித்தியாதரிசி திரு. நல்லையா, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், திருமதி அமிர்தலிங்கம், திரு. நாகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளுகிறார்கள். 'பொறுமையிற் சிறந்தவன் தருமனு, இராமனு' என்பதுபற்றிய கருத்தரங்கில் பண்டிதர் சி. குமாரசாமி பண்டிதர் குகதாசன், ஆசிரியர் திரு. சரவணபவன், பண்டிதர் நா. கந்தசாமி, ஆசிரியர் திரு சண்முகம்பிள்ளை, வித்துவான் காமாட்சிசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்ளுகின்றனர்.

சங்கீதபூஷணம் திரு. தா இராசலிங்கம், செல்வி எஸ், தங்கலட்சுமி ஆகியோரின் இசைவிருந்தும் 'தாயுள்ளம்' 'வழிகாட்டி', 'கட்டபொம்மன்' ஆகிய நாடகங்களும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிரமதானம்

பண்டத்தரிப்பு, செவ்.

'சிரமதான முறையில் சமூகத்தின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும். இன்று பிளவுபட்டுக் கிடக்கும் சமூகத்திற்கு ஐக்கியம் ஏற்படவேண்டுமெனில், பேதங்கள் அகல வேண்டுமெனில், இது போன்ற சிரமதான முறையில் மக்கள் ஈடுபடல் வேண்டும்" இவ்வாறு மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் சிரமதானத் திருப்பணி வேலையை ஆரம்பித்து வைத்து பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி சாரணர் இயக்கக் காப்பாளர் திரு. கா. அரிச்சந்திரா குறிப்பிட்டார்.

## மதுரை மீனட்சி உற்சவம்

மதுரை, ஏப். 14

மதுரை ஸ்ரீ மீனட்சி சுந்தரேஸ்வராள் சித்திரைத் திருவிழா உற்சவம் இன்று தொடக்கம் இம்மாதம் 26-ம் திகதி வரை நடைபெறும். இம்மாதம் 22-ம் திகதி பட்டாபிஷேகம். 23-ல் திக்விஜயம். 24-பகல் 12 மணிக்குப் பிறகு திருக்கல்யாணம். இரவு புஷ்பப்பல்லக்கு. 22-ல் ரதோற்சவம்.

## பலநோக்க சங்கம்

பளை, திங்கள்

வண்ணன்கேணி, தர்மக்கேணி, தம்பகாமம் ஆகிய கிராம மக்களின் பொது நலனை உத்தேசித்து பளைச் சந்தைக்கருகில் உள்ளதோர் கட்டிடத்தில் ஒரு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பண்டகசாலை ஒன்று திறக்கப்படவிருக்கிறது.

நியுயோர்க், ஏப் 14

அமெரிக்காவின் மொத்த ஜனத்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு பார்வைக் கோளாறு உள்ளதாம்.

## ஜ... றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் இந்தப் பலகாரத்தை ஏன் அந்தக் கடவுள் அனுப்பி வைத்தாரென்பது முதலில் எனக்குப் புரியவில்லை.

அன்று ஊரெல்லாம் தேடியும் ஒரு ஓட்டலும் திறக்கவில்லையாம். எங்கோ ஒரு ஓட்டலில் காய்ந்துபோன இடியப்பம் இரண்டு கிடைத்தது. அதைச் சாப்பிட்டதாக ஓரன்பர் அப்பொழுதுதான் மனச்சலிப்புடன் சொல்லிக் கொண்டுவந்தார். அவருக்காகத்தான் அந்தத் தட்டுப் பலகாரமும் மிக முன்யோசனையுடன் அனுப்பப்பட்டுள்ளதென்பதைப் பின்னர் தான் தெரிந்துகொள்ள முடிந்தது!

* * *

என்மீது ஒரு புதுவருட முதல் 'கம்பிளைன்ட்'. புதுவருடத்தன்று ஐயாறனை ஆவலுடன் எதிர்பார்த்ததாயும் அது காணமல் ஏமாற்றமாயிருந்ததாயும் சில அன்பர்கள் நேரிலேயே கூறினர். 'குற்றவாளி' என்பதை உடன் ஒப்புக்கொண்டேன். இனி இத்தவறைச் செய்யமாட்டேனென்று மன்னிப்புக் கோரினேன்.

'பெடர் லேட் தான் நெவர்'. ஒருநாள் கழித்தாவது, உங்கள் அனைவருக்கும் என் அன்பார்ந்த புதுவருட வாழ்த்துக்கள்!

* * *

பூக்கைக் கொண்டரன்
பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன்
நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே யிரைதேடி
அலமந்து
காக்கைக்கே யிரையாகிக்
கழிவரே.

—திருநாவுக்கரசர்

குறிப்பு இல எல் ஏச்/பீ. 25

(460-ம் அத்தியாயக் காணி கொள்ளும் சட்டம்.) 7-ம் பிரிவினபடியான அறிவித்தல்.

கீழே விவரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுத் தேவையொன்றிற்கென எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து 10-4-64-ந் திகதியின் 14,008-ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை.

காணியின் பெயர்:- அம்பசஹறகுருந்துவத்தை பாவுல ஒவிற்றவத்தையும் அம்பகஹவத்தையும்.

கிராமப் பெயர்:- மேல் மாகாணம் களுத்துறை மாவட்டம், பாணந்துறை தோட்டமுனை, வாதுவை பட்டணசபை எல்லைக்குள், வட்டார இல. 1 தல்பிட்டியா, தல்பிட்டியா வடக்கு.

துண்டு, பட இல. :- பீ. பீ. ஏ. 5235 இல் துண்டுகள் 1-ம் 2-ம்.

ஆர். பாஸ்கரலிங்கம்.
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபரும் காணிகொள்ளும் அதிகாரியும்.

குறிப்பு இல. இஅ 1 / 83

(460-ம் அத்தியாயக்) காணிகொள்ளும் சட்டம். 7-ம் பிரிவின்படியான அறிவித்தல்.

கீழே விவரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுத் தேவையொன்றிற்கென எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து 10-4-64-ந் திகதியின் 14008-ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை.

காணியின் பெயர்:- நைதுவவும் கட்டும்.

கிராமப் பெயர்:- மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தோட்டமுனை, குடா வஸ்கடுவை.

துண்டு, பட இல. :- பீ. பீ. ஏ. 5233-இல் துண்டுகள் 1-ம் 2-ம்.

ஆர். பாஸ்கரலிங்கம்
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபரும் காணிகொள்ளும் அதிகாரியும்.

குறிப்பு இல. LA 1194

காணி எடுத்தற் சட்டம்(அத்தியாயம் 460) 7-ம் பிரிவின படி அறிவித்தல்.

கீழ்க்காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 14,008 (பகுதி iii-ல் பார்க்கவும்.

அட்டவணை.

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்:– வலிகாமம் மேற்கு
கிராமத்தின் பெயர்:- மானிப்பாய்
காணியின் பெயர்:- செல்லர்வளவு
ஆரம்பப்பட இல. துண்டு இல. :- பிரதம பட இல. A 2429-ல் துண்டு 1.

ஆ. பெருமையினர்,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

குறிப்பு இல. LA 1210

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 640) 7-ம் பிரிவின்படி அறிவித்தல்.

கீழ்க்காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் திகதி பிரசரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 14,008 (பகுதி iii-ல்) பார்க்கவும்.

அட்டவணை.

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்:- யாழ்ப்பாணம்
கிராமத்தின் பெயர்:- சண்டிக்குளி
காணியின் பெயர்- மல்லவராயர் தோட்டம்
ஆரம்பப்பட இல. துண்டு இல. பிரதம படம் இல. A 2443-ல் துண்டு 1.

ஆ. பெருமையினர்,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.


## தேவை

### கட்டைவேலி ப. நோ. கூ. ச. சமாசத்திற்கு—லிகிதர்

சம்பளம் :
ரூபா 1200/- — ரூபா 2100/-
10 x ரூபா 90/-

பிணை:- ரொக்கம் ரூ. 500/–
ஆதனம் ரூ. 2000/-

தராதரம்: வயது 25 முதல் 35 வரை. சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் தேறியவர். (ஆங்கிலம் அல்லது தமிழ்) கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர் அல்லது கணக்குப் பதிவு முறையில் அனுபவம் உள்ளவர்கட்கு சலுகையுண்டு.

கீழ்க்காணும் விலாசத்திற்கு 24-4-64 இல் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
கட்டைவேலி ப. நோ. கூ.
ச. சமாசம்.
கரவெட்டி. 324

## இலங்கை தேசிய ஆசிரியர் சங்கம்

லங்கா ஜாதிக குரு சங்கமய)
யாழ்ப்பாணக் கிளை.
அங்குரார்ப்பணக் கூட்டம்
16-4-64(வியாழன்)காலை 10மணி
யாழ்ப்பாண மத்தியகல்லூரி
ஆசிரியர்கள் அனைவரும் வருக!

க. ஜனகா,
325 அமைப்பாளர்.

...ம்பரம்

## காணி விற்பனைக்கு

வைமன் வீதியில் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. N. ஆறுமுகம், 30, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 224

## இனும் 150 ரூபாய்

அளவெட்டி தெற்கே, ஒரு பையன் காணமற் போய்விட்டார், தற்போது ஒரு மாதம் ஆகிறது. வாய்பேசமுடியாது. பேசுவது விளங்கும். பெயர் செல்வராஜ். நிறம் சிவப்பு. வயது 13. உயரம் 4 அடி. இவரைப் பற்றிய தகவல் கிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு அல்லது சொந்தக்காரருக்கு தெரிவித்தால் ரூபா 150 இனமாக கொடுக்கப்படும்.

M. P. போல்ராஜ், 54, பேங்சால் வீதி, கொழும்பு 11. 227

## உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்றே கூறுகிறோம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1947

## ரேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. கலைமான் கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

## அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

## தொய்வு, நீரிழிவு

அனைப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவலடி யாழ்ப்பாணம்.

## மனேச்சர் தேவை

யாழ்ப்பாணம் பாங்சால் வீதியிலுள்ள அர்ச். அந்தோனியார் ஐக்கிய பண்டகசாலைக்கு மனேச்சர் தேவை. J. S. C. சித்தி அடைந்தவரும் ரூபா 1000/- பிணைப்பணம் கட்டக்கூடியவரும், இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் இம்மாதம் 20-ந் திகதிகு முன்னர் அடியிற் காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி, அர்ச். அந்தோனியார் ஐக்கிய பண்டகசாலை, 34, பழைய உப்புமால், யாழ்ப்பாணம். 236

## விற்பனைக்கு

இம்பீரியல் தையல் மெஷின் (டெயிலர் மாடல்) விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- நெசவு சங்கம், No. 165, கோயில் வீதி நல்லூர் வடக்கு,யாழ்ப்பாணம் 237

# "முஸ்லிம்கள் ஒற்றுமைக்கு தமிழே போதனா மொழி"

## முஸ்லிம் முற்போக்கு இயக்கம் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

"முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கும் முஸ்லிம் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக மாறாமல் இருப்பதற்கும் முஸ்லிம்களின் போதனா மொழி தமிழாகவே இருப்பது தான் ஒரே வழி" என்று யாழ்ப்பாணம் முஸ்லிம் முற்போக்கு இயக்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கல்வி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

முஸ்லிம் முற்போக்கு இயக்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கல்வி மகாநாட்டில் இன்றைய இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் முஸ்லிம்களின் போதனா மொழிபற்றி ஆராயப்பட்டது. முஸ்லிம்களின் தாய்ப்பாஷை தமிழ் என்றும், இது பாரம்பரியமாகப் பேசப்பட்டு வருகிறதென்றும், இது சரித்திரசம்பந்தமுடையதென்றும் மகாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டது.

இன்றைய அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கிணங்க ஒவ்வொரு மாணவனும் தத்தம் தாய்ப் பாஷையிலேயே கல்வியூட்டப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலையில் சுயமாக நாம் பேசும் பாஷை தமிழ் என்பதை எந்த முஸ்லிம்களும் மறுக்கமுடியாது. இதைவிடுத்து முஸ்லிம்களின் தாய்ப் பாஷை மகாணங்களோடு தொடர்புடையது என்று கூறுவது பொருத்த முடையது அன்று. மாகாண ரீதியாக நாம் நமது போதனா மொழிகளை மாற்றியமைப்போமானால் ஒன்றுபட்டு முஸ்லிம்கள் என்ற சமூகமாக வாழ்பவர்கள் பிளவுபட்டுத் தமிழ்ப் பேசும் முஸ்லிம், சிங்களம் பேசும் முஸ்லிம் என்ற பாகுபாட்டை வளர்ப்பவர்களாக ஆகிவிடுவோம். இங்கிலையில் நமது நாயக வாக்கியமாகிய "முஸ்லிம்கள் ஒரு கட்டிடத்திலுள்ள செங்கற்களைப் போன்று ஒருவரை ஒருவர் ஒட்டி உறுதுணையாக இருப்பவர்கள்" என்பதை வேரோடு களைந்தெறிபவர்களாவோம்.

"மேலும் சில பெற்றோர்களின் விருப்பத்திற்கேற்பத் தமது போதனா மொழியை மாற்றியமைத்ததால் கண்டிப் பகுதியில் சில பாடசாலைகள் சிங்களப் பாடசாலையாக மாறியது போன்று காலக் கிரமத்தில் முஸ்லிம்கள் தமது பாடசாலைகளை இழந்து வருந்த வேண்டிய நிலை ஏற்படும். இவ்விதமான சூழ்நிலைகள் உருவாகுவதைத் தடுப்பதற்கு ஏற்ற ஒரே வழி முஸ்லிம்கள் தமது போதனா மொழியாகத் தமிழையே கொள்வதுதான்" என்று தீர்மானிக்கப்பட்டது.


### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள ஈ.என். 7000 தொடர் இலக்கமுள்ள மொரிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 43, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். 238



ரீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.

CORNEL WILDE
in
CONSTANTINE AND THE CROSS
(Totalscope-Eastman Colour)
ALSO :- POPE PAUL'S VISIT TO HOLY LAND



3வது மகத்தான புகழ் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) கல்யாணி (நாவலப்பிட்டி)




எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி
மற்றும் பலர் நடித்த

பெரிய இடத்துப் பெண்


## ஜாதிககுரு சங்கமய

யாழ்ப்பாணம், புதன்

லங்கா ஜாதிககுரு சங்கமயவின் யாழ்ப்பாணக் கிளை அங்குரார்ப்பணம் செய்வதற்காக அச்சங்கத் தலைவர் திரு. பீற்றர் சில்வாவும் காரியதரிசி திரு. எல். ஆரியவன்சாவும் நாளை வியாழன் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் எனத் தெரிகிறது.

இங்கு தங்கும் இக்காலத்தில் திரு. பீற்றர் சில்வாவும் திரு. ஆரியவன்சாவும் இலங்கைத் தொழிற் சங்கங்களின் கூட்டுமுன்னணியின் 21கோரிக்கைகளுக்கும் யாழ்ப்பாணத்தின் சார்பாக செய்யவிருக்கும் பிரசாரத்திலும் கலந்துகொள்வார்களெனத் தெரிகிறது.

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

முல்லைத்தீவு சுங்க இலாகாவில் கடமையாற்றிய திரு. இ. அமரசிங்கம் இம்மாத இறுதியில் கொழும்பு சுங்க இலாகாவுக்கு இடமாறிச் செல்வதையிட்டு அன்னாருக்கு சக ஊழியர்களும் நண்பர்களும் ஒரு பிரியாவிடை விருந்து அளித்தனர்.

---

## சிரமதானம்

உரும்பிராய், செவ்வாய்

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் மேற்படி கல்லூரிக்கென ஒதுக்கப்பட்டிருந்த விளையாட்டு நிலத்தின் திருத்த வேலையை கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் 10 மணி வரை சிரமதானம் மூலம் ஆரம்பித்து வைத்தார்கள். இதில் 50க்கு மேற்பட்ட அங்கத்தினர் கலந்துகொண்டனர்.

அன்று மாலை பழையமாணவர்சங்கத்தினரின் வருடாந்தக் கூட்டம் திரு. அ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் நியமிக்கப்பட்டனர்.

போஷகர்: திரு. சி. தியாகலிங்கம் கியு. ஸி., தலைவர்: திரு. அ. வைத்திலிங்கம், உபதலைவர்கள்: திருவாளர்கள் ஏ. வைத்திலிங்கம், ஏ. சேனாதிராசா, வி. அழகரத்தினம், எம். பசுபதி, எம். சபாநாயகம், எம். வைத்தியநாதன், கோ. பூரணானந்தன், எஸ். நவரட்ணம், திருமதி இரத்தினசிங்கம். காரியதரிசி: எஸ். நடராசா. உதவிக்காரியதரிசி: திருமதி நாகேந்திரம், பொருளாளர்: திரு. கே. சிவஞானம், உதவிப் பொருளாளர்: செல்வன். என். பரஞ்சோதி, கணக்குப் பரிசோதகர்: திரு. எஸ். இரத்தினம்.

சங்கத்தின் நிர்வாகசபை அங்கத்தினர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செல்வன்: என். வாமதேவன், கே. குலசேகர், வி. அம்பிகானந்தன், திருவாளர்கள் எஸ். அருள்பிரகாசம், வி. பஞ்சலிங்கம், எஸ். ராஜா, ஜெகநாதன்.

---

## இன்றைய உபதேர்தல்

புதுடில்லி, ஏப். 15

லோகசபைக்கான அருப்புக் கோட்டை உபதேர்தல் இன்று நடைபெறும்.

# மாவட்ட ஆசிரியர்கள் நியமனம் விரைவில் நடைபெறும்

நல்லூர், புதன்

தேசிய கல்விக் கமிஷன் யோசனைப்படி மாவட்ட ஆசிரியர்கள் நியமனம் விரைவில் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. கிராமப் பகுதிகளில் விஞ்ஞான தொழில்நுட்ப ஆசிரியர்கள் நியமனம் சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

கல்விக் கமிஷனின் மாவட்ட ஆசிரியர்கள் நியமனத்தின் கீழ் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கும், பட்டதாரிப் பரீட்சைகளை எழுதி முடிவுகளை எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் வேலைவாய்ப்பளிக்க இம்முயற்சி வழிசெய்வதோடு கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் தட்டுப்பாட்டையும் நீக்க உதவுவதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

முனிசிப்பல் எல்லைக்குள் இத்தகைய ஆசிரியர்கள் இப்போது கடமையாற்றிவருவது போல கிராமப்புறப் பாடசாலைகளிலும் இத்தகைய ஆசிரியர்கள் பணியாற்றுவார்கள். பரீட்சைக்கு எடுத்த பாடங்களையே கிராமப்புறப் பாடசாலைகளில் போதிக்கும்படி இந்த ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

இவ்வாறு நியமனம் பெறும் ஆசிரியர்கள் நியமனம் பெற்ற மாவட்டத்தைவிட்டு வேறிடங்களுக்கு மாற்றப்படமாட்டார்களெனவும் அறியப்படுகிறது.

வகுப்பு ஒற்றுமை

# 2-வது மகாநாட்டை விரைவில் கூட்ட பாக். ஆவல்

ராவல்பிண்டி, ஏப். 14

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டும்பொருட்டு மற்றும் ஒரு மகாநாட்டைக் கூடிய விரைவில் நடாத்த பாகிஸ்தான் ஆவல்கொண்டிருக்கிறதென்று பாகிஸ்தான் உள்த்துறை மந்திரி திரு. ஹபிபுல்லாகான் தெரிவித்துள்ளார்.

வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்தும் பொருட்டு கடந்த வாரம் இந்திய—பாகிஸ்தான் உள்துறை மந்திரிகளிடையே புதுடில்லியில் மகாநாடொன்று ஐந்து நாட்கள் வரை நடைபெற்றதும் பின்னர் இதுஒத்திவைக்கப்பட்டதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

திரு ஹபிபுல்லாகான் நேற்று ராவல்பிண்டியில் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்துக்கள் வெளியேறுவது குறித்தும் இந்தியாவில் பாகிஸ்தானியர்கள் குடியேறுவது பற்றியும் இரு அரசாங்கங்களும் பரிசீலனை செய்ததென்றும் இந்தியாவின் சில யோசனைகளுக்கு பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்திருந்ததென்றும் கூறினர்.

## மகன் கொலை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார். அளவெட்டி [illegible]டகைச் சேர்ந்த ஆள்வான் ஐயாத்துரையும் செல்லப்பா என்பவரும் இறந்தவரையும் அவருடைய தந்தையையும் பிடித்துக் கொள்ள வைத்திலிங்கம் வெட்டியதாகச் சொல்லப்பட்டதால் அவர்களிருவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. ஜீ. எவ். எச். அத்துறுபானா இறந்தவரின் மரணம் பற்றி விசாரணை நடத்தினர். சுன்னாகம் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியும் அவருக்கு உதவியாக சப் இன்ஸ்பெக்டர் திரு. சி. என். தியாகராசாவும் புலன் விசாரணை செய்கின்றனர்.

## சிவாஜிகணேசனுக்கு காலில் விபத்து

சென்னை, ஏப். 14

மைசூரில் நடைபெற்ற படப்பிடிப்பில் ஏற்பட்ட விபத்து காரணமாக சிவாஜி கணேசன் காலில் வீக்கம் ஏற்பட்டது.

---

## புதுவருடவிழா

தெல்லிப்பழை, செவ்வாய்

நேற்று தெல்லிப்பழை தமிழரசுக்கட்சிக் கிளையின் புதுவருடவிழா கொண்டாடப்பட்டது. அத்துடன் கட்சியின் நிர்வாகசபைக்கூட்டமும் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கூடிய விரைவில் நெசவுநிலையம் ஒன்றினை திறந்து வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.


கீச்சிடும்




சாதனங்கள்?




விரைவில் சரிப்படுத்துகிறது. 3 இன்-ஒன்-ஓயில் சரிப்படுத்திவிடுகிறது. ஒன்று அல்லது இரண்டு துளி இந்த கீச்சிடும் சத்தத்தை நிறுத்திவிடும். டஜனுக்கு மேற்பட்ட மற்றும் பாவனைக்கும் உகந்தது.

3 இன் - ஒன் - ஓயில்

ஒழுங்கான ஓயில் ஸ்பிரே
மின்சார மோட்டார்



இப்பொழுது திரையிடப்படுகிறது!

ஸ்ரீ மனோஹரா
(யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, இரவு 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

நாகேஸ்வரராவ், ★ நடிகையர்திலகம் சாவித்திரி
ரேலங்கி, ★ கிரிஜா,
நாகையா, ★ ராஜஸ்ரீ
ஆகியோரின் திறமைமிக்க நடிப்பில் உருவாகிய

★ அனுராதா ★

முக்கிய கவனிப்பு

ஒலி, ஒளி கருவிகள் (WESTREX) வெஸ்ரெக்ஸ் ஸ்தாபன நிபுணர்களால் புதுப்பிக்கப்பட்டு சிறப்புற்றிருப்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.